பணிப்பாளர் செய்தி/ செய்தி ஆசிரியர் ஜூன், 2020

# ஊடக வெளியீடு

## இலங்கை நேரப் பயன்பாடுகள் தொடர்பான அளவீடு 2019 - இறுதி அறிக்கை


தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சு

தொ.இல: **0112147459** பக்ஸ்: **0112147447** மின்னஞ்சல்:**sample.survey@statistics.gov.lk**


2017 இல் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமானது நேரப் பயன்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரத்தில் நடாத்திய முதலாவது தேசிய அளவீடான நேரப் பயன்பாடுகள் தொடர்பான அளவீட்டின் இறுதி அறிக்கையினை வெளியீட்டிருந்திருக்கின்றது. இந்த அளவீட்டினூடாக சேகரிக்கப்பட்ட தகவலானது மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்குரிய கொள்கைகளை வடிவமைப்பதற்குரிய பெறுமதிமிக்க தகவலையும் நிலையான வளர்ச்சி இலக்குகளின் ஒரு சுட்டியாக இருக்கின்ற "ஊதியம் பெறாத வீட்டுவேலை மற்றும் பராமரிப்பு வேலைகளிற்கு செலவிட்ட நேரம்" என்பதுடன் தொடர்புபட்ட விடயங்களையும் வழங்குகின்றது.

இவ் அளவீடானது இலங்கை தொழிற்பல அளவீட்டின் நான்காவது காலாண்டிற்காக பயன்படுத்தப்பட்ட குடித்தனங்களின் மாதிரி (6,440 குடித்தனக் கூறுகள்) யை பாவித்து 2017 இல் நடாத்தப்பட்டது. 10 வயதும் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதைக் கொண்ட குடித்தன உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்ட எல்லா விதமான நடவடிக்கைகள் பற்றிய தகவலானது 24 மணித்தியாலயத்தை கொண்ட காலப் பகுதிக்காக 15 நிமிடங்கள் நேர இடைவெளிகளில் பதியப்பட்டது. மேலும், இத் தகவலானது திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ், குடித்தன உறுப்பினர்கள் மூலமாக நிரப்பப்பட்ட விசேடமாக தயாரிக்கப்பட்ட நாட்குறிப்பினூடாக ஓரே நேர செயற்பாடுகளுக்காகவும் மற்றும் ஒவ்வொரு செயற்பாடுகளின் நிகழ்விடங்களுக்காகவும் (வீடு, அலுவலகம், பொது இடங்கள் போன்றவை) சேகரிக்கப்பட்டது.

இந்த அறிக்கையானது தொழில் வாய்ப்பு மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள், ஊதியம் செலுத்தப்படாத வீட்டுவேலை சேவைகள், ஊதியம் செலுத்தப்படாத பராமரிப்பு நடவடிக்கைகள், தன்னார்வ பணிகள், கற்றல், சமூகமயமாக்கல், ஓய்வு நேர நடவடிக்கைகள் மற்றும் 10 வயதும் அதற்கு மேற்பட்ட குடித்தன உறுப்பினர்களின் சுய கவனிப்பு செயற்பாடுகளோடு தொடர்பாக செலவிடப்பட்ட நேரத்தின் புள்ளிவிபரங்களை வெளிப்படுத்துகின்றது.

பின்வரும் மூன்று சுட்டிகளானது இந்த அளவீட்டின் மூலம் நேரப் பாவனை தகவலை மதிப்பிடுவதற்கு பிரதானமாக பயன்படுத்தப்பட்டது.

1. பங்கேற்பு விகிதம் = $\frac{\text{செயற்பாடுகளில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை}}{\text{மொத்த சனத்தொகை}}$ X 100%

2. வெவ்வேறு நடவடிக்கைகளில் செலவிடப்பட்ட சனத்தொகை நேரச்சராசரி = $\frac{\text{குறிப்பிட்டவொரு செயற்பாட்டில் பங்கேற்றவர்களினால் செலவிடப்பட்ட மொத்த நேரங்கள்}}{\text{அந்த குறிப்பிட்ட செயற்பாட்டில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை}}$

3. வெவ்வேறு நடவடிக்கைகளில் செலவிடப்பட்ட செயல்பட்டவர் நேரச்சராசரி = $\frac{\text{குறிப்பிட்டவொரு செயற்பாட்டில் பங்கேற்றவர்களினால் செலவிடப்பட்ட மொத்த நேரங்கள்}}{\text{மொத்த சனத்தொகை}}$

இந்த சுட்டிகள், மேலேயுள்ள செயற்பாடுகளில் ஆண்கள் மற்றும் பெண்களின் பங்கேற்ற விகிதம், நாளொன்றிற்கு செயல்பட்டவர் நேரச்சராசரி மற்றும் நாளொன்றிற்கு சனத்தொகை நேரச்சராசரி என்பவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித் தனியாக கணக்கிடப்பட்டுள்ளதுடன் இந்த அறிக்கையினை தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நேர பயன்பாடுகள் தொடர்பான கணக்கெடுப்பின் இறுதி அறிக்கையினை வெளியிடுவது சம்பந்தமான ஒரு அதிகாரபூர்வ அறிவிப்பை வழங்கும் போது, விரிவான அறிக்கையானது தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தளமான www.statististics.gov.lk இல் வெளியிட்டிருக்கின்றது என்பதை திணைக்களமானது தெரிவிக்கின்றது.

கலாநிதி. ஐ ஆர். பண்டார
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்